| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | தேனி | காலம் : | 06/04/2024 | முதல் | 10/04/2024 |
| | அறிக்கை எண் : | 028/ 2024 | வெளியீட்டு நாள் : | 05/04/2024 | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (31.03.2024 முதல் 04.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 10-04-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31/03 | 01/04 | 02/04 | 03/04 | 04/04 | தேதி | நாள்-1 06/04 | நாள்-2 07/04 | நாள்-3 08/04 | நாள்-4 09/04 | நாள்-5 10/04 |
| 0.0 | 0.3 | 2.1 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 39 | 39 | 39 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 32 | 32 | 33 |
| 25 | 27 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 23 | 23 | 22 | 22 |
| 2 | 4 | 3 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 3 | 4 | 0 | 3 |
| 63 | 65 | 63 | 73 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 80 |
| 35 | 42 | 39 | 38 | 41 | | 20 | 20 | 20 | 30 | 30 |
| 5 | 12 | 12 | 7 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 6 | 8 | 6 |
| தென் மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

### குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடகிழக்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (05 முதல் 18 ஏப்ரல் 2024):**

### மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் பொதுவாக குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட அதிகரித்து காணப்படும். 38° செல்சியஸ் முதல் 40° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட சற்று குறைவாக காணப்படும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

5 ஏப்ரல் முதல் 11 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது சற்று அதிகரித்து காணப்படும்.20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

12 ஏப்ரல் முதல் 18 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது சற்று குறைவாக காணப்படும்.20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு (06.04.2024 முதல் 09.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மிளகாய், மா, கால்நடை.**

**மிளகாய்:**

மிளகாய் பயிரில் முரனைச் சிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை சிலந்தியின் தாக்குதலால் இலைகள் கீழ் நோக்கி சுருங்கியும், இலைக் காம்புகள் நீண்டும் காணப்படும். இதனால் செடிகளும் வளர்ச்சி குன்றி விடும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 12 ஊதா நிற ஒட்டும் பொறி அட்டை மற்றும் 12 மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி அட்டைகளை பயிரின் உயரத்திற்கேற்ப ஒரே குச்சியில் கட்டி விடவும்.

ஏதேனும் ஒன்றினை நன்கு இடித்து வயலில் இடவும்.

**மா:**

மாவில் பூ, பிஞ்சுகள் உதிர்வது மற்றும் காய்ப் பிடிப்புக்கும் திறனை அதிகரிக்க செய்வது முக்கியமானதாகும். என்.ஏ.ஏ என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தை 20 பி.பி.எம் என்ற அளவில் இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

இவ்வாறு தெளிப்பதால் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு காய்ப் பிடிப்பு அதிகரிக்கும்.

பூ பூக்காத மரங்களுக்கு 1லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் யூரியா அல்லது 1லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் என்ற விகிதத்தில் கரைசல் தயாரித்து ஏதேனும் ஒன்றை தெளிக்கவேண்டும்.

**கால்நடை:**

நிலவும் அதிகரித்த உயர் வெப்பநிலையை கருத்திற் கொண்டு தங்களது கால்நடைகளுக்கு தமிழ்நாடு கால்நடை பல்கலைக் கழகத்தின் தானுவாஸ் தாதுக் கலவையினை ஒரு நாளைக்கு ஒரு கால்நடைக்கு 50 கிராம் என்ற அளவில் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

மேலும் இவ்வெப்பக் காலத்தினை தாங்கும் பொருட்டு கால்நடைகளுக்கு தேவையான அளவு சுத்தமான தண்ணீரைக் கொடுக்கவும்.

.